பாடம் 11

# மீன் வாடை

***உனக்கு பிடிக்காத ஒரு வேலையை உன் வீட்டில் உள்ளவர்கள் செய்யச் சொல்லிய போது செய்யாமல், அதன்பின் அந்த வேலையைச் செய்யாததற்காக நீ வருந்தியது உண்டா? யோனாவின் நிலையும் அப்படித் தான் இருந்தது. எங்கே போகிறோம் என்ற நினைவு கொஞ்சம்கூட இன்றி தேவனை விட்டு யோனா பயணித்துக் கொண்டிருந்தான்.***

நினிவேக்குத் தூரமாக உள்ள தர்ஷீசுக்குப் போகும் கப்பலில் யோனா பயணித்துக் கொண்டிருந்தார். அவ்வாறு செய்தது தவறு. தேவனுடைய பார்வைக்கு மறைவானது ஒன்று மில்லை. யோனாவைப் பிடிக்கும்படி தேவன் கடலிலே கொந்தளிப்பை உண்டாக்கினார்.

கப்பற்காரர்கள் பயந்து, யார் நிமித்தம் இந்தப் பயங் கரம் வந்ததென்று கண்டறிய சீட்டுப்போட்டார்கள். சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தபோது, யோனாவிடம் விசாரித்தார்கள்.

அப்போது யோனா, ‘‘நான் எபிரெயன்; சமுத் திரத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன்’’ என்றான். ஆனாலும் தேவனிடம் பயமோ, பக்தியோ இல்லாமல் நினிவேக்குப் போகாமல் தர்ஷீசுக்குப் போய்க்கொண்டிருந்தான்.

அவனைப் பற்றிய யாவை யும் கேட்ட மாலுமிகள், தேவ னுக்குக் கீழ்ப்படியாத அவன் செயலைக் கண்டு பயந்தார்கள். மேலும், ‘‘என்னிமித்தமாகவே இப்படிக் கொந்தளிப்பு உண்டாயிற்று’’ என்று யோனா தங்களிடம் சொல்லியதால் மேலும் பயந்தார்கள்.

தங்கள் வாழ்வில் இது வரை இத்தகைய புயலை அவர் கள் கண்டதில்லை. எனவே, ‘தேவனுடைய கோபத்தால் விளைந்ததே இந்தப் பயங்கரம்’ என்றறிந்து நடுங்கினார்கள்.

கடல் மேலும் மேலும்



## மனன வசனம்

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்,**
**பாவங்களை நமக்கு மன்னிப்பார்.**
**1யோவான் 1:9.**

பயங்கரமாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. எனவே, அவர்கள் யோனாவை நோக்கி, "இந்தக் கடல் அமைதியாகும் படி நாங்கள் உனக்கு என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்கள்.

அதற்கு யோனா, "நீங்கள் என்னைத் தூக்கிக் கடலில் போட்டுவிட்டால் கடல் உடனே அமைதியாகிவிடும். என்னால்தான் இந்தத் துன்பம் வந்தது" என்றார்.

'யோனாவை எப்படிக் கடலில் போடுவது' என்று கப்பலிலுள்ளவர்கள் யோசித் தார்கள். எனவே, 'எப்படியே னும் கரைசேர்ந்து விடலாம்' என வேகமாகத் துடுப்புப் போட்டார்கள். இப்போது



கடலின் கொந்தளிப்பு மேலும்அதிகமாயிற்று. சரக்கு களைக் கடலில் எறிந்தும் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது.

யோனாவோ, "என்னைக் கடலில் போடாமல் நீங்கள் என்ன செய்தாலும் கடல் அமைதியாகாது" என்று அமைதியாகவும் அழுத்தமாகவும் சொன்னார்.

வேறுவழி தெியாமல், அவர்கள் தேவனிடம், "ஆ! கர்த்தாவே எங்கள்மேல் இவன் இரத்தப்பழி வேண்டாம். உம் சித்தம் போலாகட்டும்" என்று ஜெபித்தனர். பின்னர் யோனா வைக் கடலினுள் போட்டனர். கடலில் யோனாவைப் போட்ட மாத்திரத்தில் கடல் அமைதியா யிற்று. அந்த மனிதர் மிகவும் பயந்து, கர்த்தருக்குப் பலி யிட்டுப் பொருத்தனை செய் தார்கள்.

கீழ்ப்படியாமல் யோனா செயல்பட்டாலும் தேவன் யோனாவைக் கைவிட்டுவிட வில்லை. யோனா கடலினுள் மூழ்கிப்போக விடவில்லை. யோனாவைப் பத்திரமாகக் காக்க தேவன் ஒரு

## செய்தி

**என் தவறுகளை உணர்ந்து, திருந்துவதற்கு தேவன் எனக்கு உதவுகிறார்.**

பெரிய மீனுக்குக் கட்டளை யிட்டிருந்தார். அந்த மீன் தேவன் தனக்குக் கட்டளை யிட்டபடியே யோனாவைப் பத்திரமாகத் தன் வயிற்றில் வைத்துக்கொண்டு பயணத் தைத் தொடர்ந்தது.

ஆனால், தான் சாகாதது யோனாவுக்குத் மகிழ்ச்சியைத் தந்தது. இருப்பினும் மீனின் வாடையும் மீனின் வயிற்றுக் குள் இருப்பதும் அவருக்குச் சங்கடமாக இருந்தது. தன் தவறை உணர்ந்தார். தேவனை நோக்கி ஜெபித்தார். மன்னிப் புக் கேட்டார். யோனாவை அந்த மீன் வெளியிலே கக்கு மாறு தேவன் கட்டளையிட்டார்.

என் செல்லமே! பாவி களாகிய நம்மையும் தேவன் நேசிக்கிறார் அல்லவா? தேவனைத் துதி.

***செய்முறை:*** **இவ்வாரப் பாடத்தை ஒருமுறை நன்கு படி. பின்னர் இங்கே கொடுக்கப் பட்டுள்ள படங்களுக்கு நேரே படத்திற்குரிய பெயர்களை எழுது. அதற்கும் பாடத்திற்கும் உள்ள தொடர்பு என்ன எனக் கோடுகளில் எழுது.**

## புதிர் 11


______________________________


______________________________


______________________________


______________________________

3
______________________________


______________________________